17.11.2025

அ.வ.எண்.1075/2017

பி.சா.1 - புஷ்பா, க/பெ. சதாசிவம்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 17.11.2025 is accordance with the provision of Act X of 3331

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் எனக்கு எழுத படிக்கதெரியாது என்றும், நான் சொன்னதை டைப் செய்து படித்து காட்டினார்கள் என சொல்லவில்லை என்றால் சரிதான். என் கணவர் சதாசிவம் 2011 ல் இறந்தார். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள முகவரியில் 1985 ம் ஆண்டில் இருந்து வசித்து வருகிறேன். வா.சா.ஆ.6 கிரய பத்திரத்தில் உள்ள முகவரியில் வசித்து வருவதாக கிரய பத்திரத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 கிரய பத்திரத்தில் கதவு எண்.29, மதியழகன் நகரில் குடியிருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2. பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள கதவு எண்.43, மதியழகன் நகரில் குடியிருப்பதாக சொல்வது தவறு என்றால் தற்போது சற்று தள்ளி உள்ளேன். கதவு எண்.43, மதியழகன் நகர் என்பது வழக்கு சொத்தில் இருந்து 9 வீடுகள் தள்ளி உள்ளது. கிரய பத்திரத்தில் குடியிருக்கும் முகவரி குறிப்பிடப்படும் என்றால் சரிதான். வா.சா-ஆ.10 ஆவணத்தில், மறைந்த முத்துசாமி அவர்களது முகவரி 100, 4 வது குறுக்குதெரு, மதியழகன் நகர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மறைந்த முத்துசாமியின் இறப்பு சான்றிதழில் அவர்களது முகவரி 2/100, 4 வது குறுக்குதெரு, மதியழகன் நகர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2/100 என்பது யவழக்கு சொத்திற்கு அருகில் உள்ள வீடு என்றால் சரிதான். மேற்படி வீட்டில் தான் முத்துசாமி 1982 ல் இருந்து குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். முத்துசாமி இறக்கும்வரை அந்த முகவரியில் தான் வசித்து வந்தார் என்றால் எனக்கு சரியாக தெரியவில்லை.

3. முத்துசாமி கிரயம் செய்ததாக சொல்லும் போது மேற்படி முகவரியில் தான் இருந்து வந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 கிரய பத்திரத்தில் முத்துசாமியின் முகவரி கதவு எண்.43, மதியழகன் நகர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேற்படி முத்துசாமி குடியிருக்கவில்லை என்றால் ஆவணத்தில் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. முத்துசாமி, சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துகொடுத்திருந்தால் அவர் குடியிருந்த முகவரியான கதவு எண்.100, மதியழகன் நகர் என்பதை குறிப்பிட்டிருப்பார் என்றால் சரியாகத்தான் முகவரியை குறிப்பிட்டிருந்தார். உண்மையில், முத்துசாமி மேற்படி முகவரியில் வசித்திருந்தால் அவருடைய சரியான முகவரியை குறிப்பிட்டிருப்பார் என்றும், முத்துசாமி கிரயம் செய்து தரவில்லை என்றும், வா.சா.ஆ.3 1979, ஆவணத்தில் உள்ள முகவரியை நாங்களாகவே குறிப்பிட்டு பத்திரம் ஏற்படுத்தி கொண்டோம் என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ.6 கிரய ஆவணத்தில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியாக நினைவில்லை. கிரய ஏற்பட்ட பிறகு உடனே இடத்தின் பட்டாவை மாற்ற வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 2014 ம்ஆண்டு வரை வழக்கு சொத்துக்கான பட்டாவானது முத்துசாமியின் பெயரில் தான் இருந்து வந்தது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு 2019 ம் ஆண்டில் எனது பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டது என்றால் சரிதான். முத்துசாமி உயிருடன் இருந்தவரை எனது பெயருக்கு பட்டா மாற்றவில்லை என்றால் சரியாக தெரியவில்லை. என் கணவர் பட்டா மாற்றம் செய்திருப்பார்.

5. 2014 ம் ஆண்டு நான் ஷெட் போட சென்ற போது வாதிகள் அவர்களுடைய இடம் என்று சொன்னார்கள் என்றால் இன்றுவரை எதுவும் சொல்லவில்லை.வாதிகள் எங்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் புகார் கொடுத்தனர். அதை திரும்ப வாங்கி கொண்டோம். வாதிகள் அவர்களது புகாரில் வழக்கு சொத்து அவர்களுடைய தாத்தாவின் இடம் என்றும், அதை நான் ஆக்கிரமித்து செட் போட முயற்சி செய்ததாக புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அதை நாங்கள் திரும்ப வாங்கி கொண்டோம். நீதிமன்றத்தில் பார்த்து கொள்ளுமாறு சொன்னார்கள். நான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேனா

என்றால் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை. வாதிகள், இடையூறு செய்வதாக நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை.

6. உண்மையில் வழக்கு சொத்தை கிரயம் பெற்றிருந்தால் வாதிகள் இடையூறு செய்வதாக நான் வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எனது பிரமாண வாக்குமூலத்தில், பத்தி 2 ல், ஷெட் போட கால் மட்டும் ஊன்றியிருப்பதாக சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. அதில் லெட்டின் குழி தோண்டியுள்ளோம், ஷெட் போட்டுள்ளோம், பொருட்கள் உள்ளது. தாவா சொத்தில் லெட்டின் குழி தோண்டியுள்ளோம், ஷெட் போட்டுள்ளோம், பொருட்கள் உள்ளது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

7. தாவா சொத்தில் கால் மட்டும் ஊன்றியுள்ளது என்றும், தாவா சொத்தில் லெட்டின் குழி தோண்டியுள்ளோம் என்பதற்கும், ஷெட் போட்டுள்ளோம் என்பதற்கும் பொருட்கள் உள்ளது என்பதற்கும் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக மேற்கண்டவாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஷெட் போட்டுள்ளேனா என்றால் அஸ்திவாரம் மட்டும் போட்டுள்ளேன். வா.சா.ஆ.7 நகைக்கடன் செலுத்து ரசீதில் கே.வி.முத்துசாமி என கையொப்பம் செய்துள்ளனர் என்றால் எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.9 INCOME TAX CLEARANCE CERTIFICATE ல் கே.வி.முத்துசாமி என கையொப்பம் செய்துள்ளார் என்றால் மாற்றம் உள்ளது. எனக்கு தெரியவில்லை.

8. வா.சா.ஆ.10 புகார் ஏற்பு ரசீது ஆவணத்தில், கே.வி.முத்துசாமி என்று தான் கையொப்பம் செய்துள்ளார் என்றால் நடுவில் மாற்றியுள்ளார். வா.சா.ஆ.8 இந்திய தபால் மற்றும் முதலீட்டு மாறுதல் விண்ணப்பத்தில், 1986 ம் ஆண்டு கே.வி.முத்துசாமி என கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான், எங்களது கிரய ஆவணத்தில் முத்துசாமி என கையொப்பம் செய்துள்ளார். 1983 ம் ஆண்டில் இருந்து 2007 ம் ஆண்டு வரை கே.வி.முத்துசாமி என கையொப்பம் செய்துள்ளார் என்றும், எங்களது கிரய ஆவணத்தில் மட்டும் முத்துசாமி என மட்டுமே உள்ளது என்றால் எங்களது ஆவணத்தில் முத்துசாமி என கையொப்பம் செய்துள்ளார்.

9. உண்மையாகவே சார் பதிவாளர் அலுவலகத்தில் முத்துசாமி கையொப்பம் செய்திருந்தால் அவர் கே.வி.முத்துசாமி என்று தான் கையொப்பம் செய்திருப்பார் என்றும், அது அவருடைய கையொப்பம் இல்லை என்றும் அதனால்தான் கே.வி.முத்துசாமி என கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. சார் பதிவாளர் அலுவலகத்தில் வந்து கையொப்பம் செய்து கொடுத்தார். வா.சா.ஆ.6 கிரய பத்திரத்தில் உள்ள 5 பக்கங்களிலும், முத்துசாமியின் கையொப்பம் வெவ்வேறாக உள்ளது என்றால் இல்லை. வா.சா.ஆ.6 கிரய பத்திரத்துடன் அசல் மூல ஆவணம் மற்றும் அசல் பட்டா கொடுத்தாரா என்றால் ஆமாம். மேற்குறிப்பிட்ட ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

10. வா.சா.ஆ.6 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளவர்கள் எனது உறவினர்களா என்றால் இல்லை. சாட்சிகள் மாரப்ப கவுண்டர் மற்றும் நாகரத்தினம் உறவினர்கள் அல்ல, எனது கணவருக்கு பழக்கம். பத்திரம் எழுதும்போது சாட்சிகள் இருந்தார்கள். வழக்கு சொத்தில் M-SAND மண் கொட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 10 வருடங்களாக வழக்கு சொத்திற்கு செல்லவில்லை. 10 வருடத்திற்கு முன்பாக, M-SAND கொட்டினோமா என்றால் மணல் கொட்டினோம். வழக்கு சொத்தில் 2 மற்றும் 3ம் வாதிகள் M-SAND கொட்டி வீடு கட்டிகொண்டு இருக்கிறார்கள் என்றால் சரிதான்.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

மேலும் குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டி ஒத்தி வைக்கப்படுகிறது.

| |
|---|
| Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct<br><br>Sd./M.Santhosham<br>District Munsif, Sulur |